செ.வெ.எண்: 691 21/8/08

**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் பதிவு – இணைய தளம் மூலமாக இரு வார காலத்திற்குள் 54 மனுக்கள் பதிவு**

அரசின் செயல்பாடுகள் வெளிப்படையாகவும், நம்பகத்தன்மை உடையதாகவும், ஒளிவு மறைவின்றியும் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இதன்படி, இந்தியாவிலேயே தமிழக மாநிலத்திற்கென குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான கொள்கையினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.2.2008 அன்று வெளியிட்டார்கள்.

புதிதாக தொழில் தொடங்க முனைவோர்களுக்கு இணைய தளம் வழியாக பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்படும் என மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் திரு நா.பழனிச்சாமி அவர்கள் 7.5.2008 அன்று மானிய கோரிக்கையின்போது அறிவித்திருந்தார்.

இதன்படி, 8.6.2008 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் திரு பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கள் இணைய தளம் (www.msmeonline.tn.gov.in) மூலமாக தொழில் முனைவோர் பதிவு செய்யும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

இதன்படி, மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தொழில் மையத்திற்கு நேரில் செல்லாமலேயே, இணைய தளம் வாயிலாக தொழில் முனைவோர் பதிவறிக்கை பெறுவதற்கு தொழில் முனைவோர்களிடமிருந்து ஆர்வம் தற்போது அதிகரித்துள்ளது.

கடந்த இரு வார காலத்திற்குள் தமிழகத்தில் கடைகோடி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 மனுக்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 8 மனுக்கள், ஈரோடு மாவட்டத்தில் 7 மனுக்கள், தஞ்சை, கோவை மாவட்டங்களில் தலா 6 மனுக்கள் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 54 மனுக்கள் இணைய தளம் மூலமாக தொழில் முனைவோர் பதிவறிக்கை தொகுதி–1 (EM Part-1) பதிவு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புதிதாக தொழில் தொடங்குவோர் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநர் திரு கோ.சந்தானம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை-9.**

21-8-08